# வெற்றிடங்கள்

## கருத்திட்ட பணிக் குழுவை இணைத்துக் கொள்ளுதல்

## மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் (MWSIP) கட்டம் (II) (கருத்திட்ட காலப் பகுதி 2026 - 2031)

### கமத்தொழில், கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் (MSD) இலக்கம் 01/2019 ஐ உடைய சுற்றறிக்கை மற்றும் அரசின் ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் (MWSIP) கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு, கருத்திட்ட முகாமைத்துவ பணிக் குழுவை "ஒப்பந்த அடிப்படையில்"

இணைத்துக் கொள்ளும் முகமாக தொடர்புடைய தகைமைகளை பூர்த்தி செய்துள்ள அர்ப்பணிப்புள்ள இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்ட, 2026.01.21 ஆந் திகதி தினகரன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் (MSD) மேற்குறித்த சுற்றறிக்கைக்குப் பதிலாக 2026.02.02 ஆந் திகதியிலிருந்து செயற்படக் கூடிய வண்ணம் இலக்கம் 01/2026 ஐ உடையதாக புதிதாக சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில், தொடர்புடைய பதவிகள் தொடர்பான விபரங்கள், சம்பளம் மற்றும் தேவையான தகைமைகள்

போன்றவை அச் சுற்றறிக்கையின் பிரகாரம் காணப்பட வேண்டியுள்ளது. இவ்விடயத்துடன் தொடர்புடைய தகவல்களை www.irrigationmin.gov.lk மற்றும் www.treasury.gov.lk ஆகிய இணையதளங்களுக்கு உட்பிரவேசிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம். எனவே, இலக்கம் 01/2019 ஐ உடைய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் எமக்கு கிடைக்கப் பெற்றுள்ள விண்ணப்பங்களிலிருந்து, ஆட் சேர்ப்பு செயன் முறை இலக்கம் 01/2026 ஐ உடைய சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்சேர்ப்புக்கான தகைமைகளின் பிரகாரம் மாத்திரமே மேற்கொள்ளப்படும். இவ் ஆட்சேர்ப்புடன் தொடர்புடையதாக எம்மால் முன்னமே

2026.01.21 ஆந் திகதி தினகரன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம், இன்றளவிலும் விண்ணப்பங்களை முன் வைத்துள்ள விண்ணப்பதாரிகள் 2026.02.02 ஆந் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் தேவையான கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகளை தாம் ஏற்கனவே முன் வைத்திருந்த விண்ணப்பங்களில் குறித்துக்காட்டுவதற்கு தவறியிருப்பின், இலக்கம் 01/2026 ஐ உடைய சுற்றறிக்கையின் பிரகாரம் தமது தகைமைகளை மீளவும் குறித்து புதிதாக விண்ணப்பமொன்றை முன் வைத்தல் வேண்டும்.

இலக்கம் 01/2026 ஐ உடைய சுற்றறிக்கையின் பிரகாரம் விண்ணப்பிப்பதற்கு 2026.02.16 ஆந் திகதி வரை கால நீடிப்பு வழங்கப்படுகின்றது.

மேலும், இவ் விண்ணப்பப்படிவங்களை முன் வைக்கின்ற விண்ணப்பதாரிகளின் அதிகூடிய வயதெல்லை 64 என திருத்தப்படுகின்றது.

இவ்விடயத்துடன் தொடர்புடைய மேற்குறித்த விபரங்களைத் தவிர்த்து விளம்பரத்திலுள்ள ஏனைய அனைத்து விபரங்களும் 2026.01.21 ஆந் திகதி தினகரன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் காணப்படும்.

**பதவி வெற்றிடங்களின் விபரங்கள்**

| இலக்கம் | விபரம் / பணி நிலையம் | சம்பள வகுதி | பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | கருத்திட்ட முகாமைத்துவ அலகு – கொழும்பு | வகுதி A முதல் F மற்றும் உதவி பணிக் குழு | 71 |
| 02 | கருத்திட்ட விருத்தி அலகு – மடாட்டுகம | | 37 |
| 03 | கருத்திட்ட விருத்தி அலகு – மொரகஹகந்த | | 38 |

**செயலாளர்**
**கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு 10 ஆவது மாடி,**
**இலங்கை மகாவலி அதிகார சபை கட்டிடம்,**
**இலக்கம் 500, ரீ. பீ. ஜாயா மாவத்தை,**
**கொழும்பு 10.**